1982 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அரசாங்கம் முதலில் ஆய்ந்து இதைச் செய்ய முடியுமா, எப்படிச் செய்வது என்று வழிவகைகளை செய்த பிறகு அங்கே இருக்கிற பிரதிநிதிகளை எல்லாம் அழைப்பது பொருத்தமாக இருக்கும். ஆரம்பத்திலேயே போட்டு விட்டால் இதிலே முடிவு ஏற்படாது என்று கருதுகிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கு அரசுப் பணிகளில் ஒதுக்கீடு செய்யும் திட்டம்.

*வினா எண் 751—திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றோருக்கு அரசுப்பணிகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கிட இந்த உடல் ஊனமுற்றோர் ஆண்டில் அரசு ஆணைப் பிறப்பிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: அரசுப் பொதுப் பணிகளிலும் கல்வி நிலையங்களிலும் எல்லாவிதமான நிர்வாகங்களிலும் (அரசு உள்ளாட்சி மற்றும் நிதியுதவி பெறும் நிர்வாகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களையும் சேர்த்து தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்பட்டோர்க்கு எங்கெங்கு ஒதுக்கீடு விதிமுறை கடைபிடிக்கப்படுகிறதோ அங்கெல்லாம்) எழும் காலியிடங்கள்/இடங்களில் 3 விழுக்காடுகளை உடல் ஊனமுற்றோர்க்கு ஒதுக்கீடு செய்யும்படி சமூகநல அரசாணை பல்வகை எண். 602, நாள் 14–8–1981 மூலம் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே, அந்த அரசாணையுடைய அடிப்படையிலே கண்ணற்றோர், காது கேளாதவர்களுக்குச் சென்ற ஒரு ஆண்டில் கொடுக்கப்பட்ட வேலைகள் எத்தனை என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுதான் மூன்று விழுக்காடு என்று ஒதுக்கீடு செய்துள்ளது. படிப்படியாக இதைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே, இந்த உடல் ஊனமுற்றவர்களில் முழுமையாக கண் தெரியாதவர்கள், காது முழுமையாக கேளாதவர்கள் அல்லது கை முடமானவர்கள், கால் நொண்டியாக உள்ளவர்கள் என்று இப்படி பல்வேறு உடல் ஊனமுற்றவர்கள் இருக்கிற காரணத்தால் இதிலே முழுமையாக கண் தெரியாதவர்களுக்கு அதிகப்படியான ஒதுக்கீடு தருவதற்கு அரசு முன் வருமா? அதேபோல கண் தெரியாதவர்களுக்கு மட்டுந்திரம் ஒரு தொழிற்பேட்டை அமைத்து அவர்கள் வாழ வழி வகை செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் ஒரு விழுக்காடு என்ற விதத்திலே அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து அதன் மூலம்வேலை வாய்ப்பு அளித்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து நல்ல கருத்தாக இருக்கிறது. அதுபற்றி அரசு பரிசீலித்து எப்படிச் செய்ய முடியும் என்பதை ஆராயும்.

திரு. ப. தீர்த்தராமன்: தலைவர் அவர்களே, இந்த ஒதுக்கீடு தனியார் துறையிலும் அளிக்க அரசு முன வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தனியார் துறையிலே அவர்களுக்கு இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: தலைவர் அவர்களே, உடல் ஊன முற்றவர்களுக்கு மூன்று விழுக்காடு வேலை வாய்ப்பு சென்ற ஆண்டு முதல் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சென்ற ஆண்டு மதுரை மாவட்டத்திலே அப்படி கொடுக்கப்பட்ட 14 ஊனமுற்றவர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்களே, அவர்களுக்கு வேலை கொடுக்க அரசு முன் வருமா? அந்த மாவட்ட கழகத்திற்கு உத்தரவிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்க இயலும்.

ஊனமுற்றோர்களுக்காக தொழிற்பள்ளிகள் மற்றும் பள்ளிகளை மாவட்ட ரீதியாக அமைக்கும் திட்டம்.

*வினா எண். 752— திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உடல் ஊனமுற்றோர்கள் தொழிற் பள்ளிகள்—பள்ளிகள் மாவட்ட ரீதியாக அமைக்கும் யோசனை உண்டா?

(ஆ) ஆம் எனில், இப்பணிக்காக மாவட்ட ரீதியாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) தமிழகத்தில் ஊன முற்றோர்களுக்காக தொழில் பள்ளிகளை மாவட்ட ரீதியாக அமைக்கும் யோசனை தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் காது கேளாதவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்